பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 25
சனிக்கிழமை
21 டிசெம்பர் 2024
மார்கழி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## கிளிநொச்சியில் மலேரியா!

கிளிநொச்சி, டிசெ. 21
கிளிநொச்சி மருத்துவமனையில் மலேரியாத் தொற்றுடன் ஒருவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். மலேரியா அதிகளவில் பரவியுள்ள ☞ 11

# சித்திரைப் புத்தாண்டுக்குள் உள்ளூராட்சித் தேர்தல்!

### ஜனாதிபதி அநுர அறிவிப்பு



**கொழும்பு, டிசெம்பர் 21**

**தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும். 2025 ஆம் ஆண்டுக்குள் மாகாணசபைத் தேர்தலும் நடத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று அறிவித்துள்ளார்.** ☞ 11

## உள்ளூராட்சித் தேர்தலில் பெரமுன எழுச்சியுறும்!

கொழும்பு, டிசெ. 21
பொதுத்தேர்தலைவிடவும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுனக் கட்சியின் வாக்கு வங்கி அதிகரிக்கும் என்று நாமல் ராஜபக்ச நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞ 11

### காசோலை மோசடி வழக்கு

## முன்னாள் எம்.பி. திலீபன் பொலிஸாரால் கைது!

வவுனியா, டிசெ. 21
காசோலை மோசடி வழக்கில், ஈ.பி.டி.பி.யை பிரதிநிதித்துவப்படுத்திய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கு. திலீபன் வவுனியா மாவட்ட நிதிமோசடி குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திலீபனின் ☞ 11

'கிளீன் சிறீலங்கா' ஜனாதிபதி செயலணியில்

## சிறுபான்மையினர் புறக்கணிப்பு

கொழும்பு, டிசெ. 21
'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டத்தைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில், சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.
'வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற ☞ 11

# படகில் உயிரிழந்த ஐவரை கடலில் வீசிவிட்டு வந்தோம்!

### முதற்கட்ட விசாரணைகளின் போது ரொஹிங்ய அகதிகள் 'பகீர்' வாக்குமூலம்

திருகோணமலை, டிசெ. 21
மியான்மரில் இருந்து வரும் போது, படகில் உயிரிழந்த ஐந்து பேரை கடலில் வீசிவிட்டு வந்தோம் என்று ரொஹிங்ய அகதிகள் இலங்கை விசாரணையாளர்களிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.
மியான்மரில் இருந்து 115 பேருடன் பயணித்த ☞ 11





## உட்கட்டமைப்பை மேம்படுத்துங்கள்!

### இரணைமடு விவசாயிகள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 21
சந்தையின் உட்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்றும், சந்தையின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி கரைச்சி பிரதேச ☞ 11

### எட்கா ஒப்பந்தம் -

## இன்னும் இணக்கமில்லை ஆனால் பேச்சுக்குத் தயார்!

### வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 21
எட்கா ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை முன்னெடுப்பதற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம்.
ஆனால், அந்த ஒப்பந்தத்தை நாம் நிறைவேற்றவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித் ☞ 11

## மண்கும்பானில் விபத்து இளைஞர் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், டிசெ. 21
மண்கும்பான் கறுப்பாச்சி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ☞ 11



## பாம்பு தீண்டி ஒருவர் சாவு!

மன்னார், டிசெ. 21
மன்னார் பெரியபண்டிவிரிச்சான் பகுதியில், பாம்பு தீண்டி குடும்பத்தலைவர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
இயூசேபியஸ் லெனின் கிறேசியஸ் சில்வா ☞ 11

## இஸ்ரேல் போர்க்குற்றவாளி இலங்கைக்குள் நடமாட்டம்!

### உடன் கைதுசெய்யுமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம்

கொழும்பு, டிசெ. 21
இஸ்ரேல் இராணுவத்தின் போர்க்குற்றவாளி ஒருவர் தற்போது இலங்கையில் உள்ளார் என்றும், அவரை உடனடியாகக் கைதுசெய்யவேண்டும் எனவும் வலி ☞ 11

முச்சந்தி முரளி



'எங்கப்பன் எட்காவுக்குள் இல்லையெண்டுற மாதிரிக் கிடக்கு உவையின்ர கதையள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஆய்வுக் கப்பல்களுக்கு தேசிய கொள்கைத்திட்டம்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 21**

**இலங்கைக்கு வருகைதரும் சர்வதேச ஆய்வுக் கப்பல்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் தேசிய கொள்கைத் திட்டமொன்று வகுக்கப்படும். அதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஆய்வுக் கப்பல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச ஆய்வுக் கப்பல் விவகாரத்தில் தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கியே செயற்படுகின்றோம். ஆய்வுக் கப்பல்கள் தொடர்பில் தேசிய கொள்கைத் திட்டமொன்று அவசியம். தேசிய கொள்கையை வகுக்க விசேட குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆய்வுகளை நடத்தி அறிக்கையை முன்வைக்கும் பொறுப்பு இந்தக் குழுவுக்கு வழங்கப்படும். அதற்கமையவே எமது செயற்பாடுகள் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# மரணதண்டனை ஐவருக்கு உறுதி

கொழும்பு, டிசெ. 21

தொழிலதிபர் மொஹமட் ஷியாம் கொலைச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன உட்பட ஐந்து பிரதிவாதிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதி குழாம் விதித்த மரண தண்டனையை, உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

குறித்த தண்டனைக்கு எதிராக பிரதிவாதிகள் முன்வைத்த மேன்முறையீட்டு மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்து இந்தத் தீர்ப்பை நேற்று அறிவித்துள்ளது. (ச-இ)

# அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி

கொழும்பு, டிசெ.21

இலங்கையின் அரச ஊழியர்களுக்கு அரச சேவை தொடர்பில் இந்தியாவில் பயிற்சி வழங்குவது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஒரு அரச ஊழியருக்கு இரு வாரங்கள் பயிற்சித் திட்டம் என்ற வகையில் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் ஆயிரத்து 500 அரச ஊழியர்களுக்கு இவ்வாறு பயிற்சி வழங்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் கூறினார். (ச-44)

# எட்கா ஒப்பந்தம் இடமளிக்கோம்

## வீரசேகர விடாப்பிடி

கொழும்பு, டிசெ.21

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. தேசப்பற்றுள்ளவர்களை ஒன்றிணைத்துப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் தேவைக்காக மக்கள் விடுதலை முன்னணி தனது அடிப்படைக் கொள்கைகளை மாற்றியுள்ளமை கவலைக்குரியது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றி சிங்கள மக்களிடம் ஒன்றையும், இந்தியாவுக்கு பிறிதொன்றையும் குறிப்பிடுகிறார். 13 ஆவது திருத்தம், மாகாணசபை முறைமை தொடர்பில் நாட்டு மக்களிடம் வெளிப்படை தன்மையுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



புலம்பெயரிகளால்

# மஹிந்தவுக்கு அச்சுறுத்தலாம்

கொழும்பு, டிசெ.21

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக புலம்பெயர்வாளர்கள் செயற்பட்டு வருவதாகவும், வெளிநாடுகளில் இருக்கும் பிரிவினைவாத கொள்கையுடையவர்களால் அவருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

ராஜபக்சக்களைப் பழிவாங்கும் வகையில்தான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. 30 வருட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் கடுமையான தீர்மானங்களை எடுத்தனர்.

புலம்பெயர்வாளர்களும், பிரிவினைவாத கொள்கையுடையவர்களும் இன்றும் ராஜபக்சக்களுக்கு எதிராகவே செயற்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# புதிய அரசமைப்பு எப்போது?

## சாணக்கியன் கேள்வி

கொழும்பு, டிசெ.21

தேசிய இனப்பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் உறுதியான காலப்பகுதியை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

2015 மற்றும் 2017 வரையான காலப்பகுதியில் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய வரைபு நகல் தயாரிக்கப்பட்டது. இதற்கு தேசிய மக்கள் சக்தியும் இணங்கியது.

இந்த அரசமைப்பு இறுதிப்படுத்தப்பட்டு தற்போது நிறைவேற்றப்படும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதியளித்துள்ளது. எமக்குரிய அரசியல் உரிமைகளைப்பற்றி பேசுவது இனவாதம் கிடையாது. எனவே, தீர்வை வழங்கும் காலப்பகுதியை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



# வெள்ளைவானில் கடத்தப்பட்டோர் முதலைகளுக்கு இரை

## கூறுகிறார் ராஜித

கொழும்பு, டிசெ.21

வெள்ளை வானில் கடத்தியவர்களைக் கொலை செய்து அந்தச் சடலங்களை முதலைகளுக்கு இரையாக்கியமை விசாரணைகள் மூலம் நிரூபணமாகியுள்ளதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த விடயத்தை குற்ற விசாரணைப் பிரிவினர் தமக்கு அறியத் தந்தனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி, பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் இணைந்து கொண்ட நபர் இந்த உண்மைகளை மூடி மறைக்க உதவியுள்ளார். இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை விதிப்பதற்கு அரசாங்கமொன்றுக்கு ஐந்து ஆண்டு கால அவகாசம் போதுமானதல்ல என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு நிச்சயம் நிறைவேறும்

## பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

**புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும். இந்த விடயத்தில் அரசாங்கம் எவ்விதத்திலும் பின்வாங்காது என்று பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

நாட்டில் தற்போதுள்ள அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் ஆணையும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, அந்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும். புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படும். நாட்டில் இதுவரை இயற்றப்பட்ட அரசமைப்புகளின் போது மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படவில்லை. எம்மால் கொண்டுவரப்படும் அரசமைப்பு மக்கள் அனுமதி கிடைத்ததாக இருக்க வேண்டும். அதற்குரிய பணிகளுக்காகவே மூன்று வருடங்கள் என கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்கலாம். சிலவேளை மூன்று வருடங்களுக்கு முன்னர்கூட அது நடக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# வாகனங்கள் இறக்குமதி டொலரைப் பாதிக்காது

கொழும்பு, டிசெ.21

மூன்று கட்டங்களின் கீழ் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதால் அது எமது டொலர் கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று மத்தியவங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். மத்தியவங்கியில் தற்போது 6.5 பில்லியன் டொலர் கையிருப்பு காணப்படுகின்றது. நாணயநிதியத்தின் இலக்கு 5.6 பில்லியனாகும். நாம் அதனைத் தாண்டிவிட்டோம்.

வாகன இறக்குமதியினால் மத்தியவங்கியின் வெளிநாட்டுக் கையிருப்புக்கு தாக்கம் ஏற்படாது. சந்தைத் தொகுதியில் உள்ள டொலர் ஊடாகவே அது நடக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அர்ஜுனவுக்கு பிடியாணை

கொழும்பு, டிசெ.21

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் அஜன் கார்டிய புஞ்சிஹேவா ஆகியோருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற மத்தியவங்கி பிணைமுறிச் சம்பவம் தொடர்பில் இந்தப் பிடியாணை உத்தரவை கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே வழங்கியுள்ளார்.

குறித்த சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ள போதிலும், அவர்கள் முன்னிலையாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# நாட்டுத் துப்பாக்கியுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், டிசெ.21

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலிப் பகுதியில் நாட்டுத் துப்பாக்கி யுடன் 19 வயதான இளைஞர் ஒருவர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபரை இன்று நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-113-125)



## அவுஸ்திரேலியாவில்

# இலங்கையருக்கு 37 வருடச் சிறை

கொழும்பு, டிசெ.21

இலங்கையைச் சேர்ந்தவரும், அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமான தினுஷ் குரேரா என்பவருக்கு அவுஸ்திரேலியாவின் விக்டோரியா உயர்நீதிமன்றம் 37 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. தினுஷ் குரேரா கடந்த 2022 ஆம் ஆண்டு மெல்போர்னில் உள்ள இல்லத்தில் அவரது மனைவி நெலோமி பெரேராவை கோடரியினால் தாக்கி படுகொலை செய்த குற்றத்துக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தக் கொலையை 'மிகமோசமான' படுகொலை என வர்ணித்து விக்டோரியா உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. (ச-இ)

# உபாலி பன்னிலகே பதவிவிலக வேண்டும்

கொழும்பு, டிசெ.21

கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் பேராசிரியர் உபாலி பன்னிலகேயை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குமாறு ஓஷல ஹேரத்தேவால் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் பேராசிரியர் உபாலி பன்னிலகே ருஹுணு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக கடமையாற்றி வருவதாகவும் அரசமைப்பின் பிரகாரம் அரச ஊழியர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க முடியாது எனவும் மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-22.6)




தலைவர்கள் மட்டுமில்லை மாபியாக்களும் தாங்களா உருவாகிறேலை, உருவாக்கப்படுகினம். அதுதான் உண்மை. உந்த மாபியா எல்லாம் சண்டைக் காலத்தில இஞ்ச கண்ணிலையும் காணேலை. இப்ப என்னெண்டால் வாள்வெட்டு மாபியா, கஞ்சா மாபியா, கசிப்பு மாபியா, ஹெரொய்ன் மாபியா,மணல்மாபியா, மருந்துமாபியா எண்டு தடக்கி விழுந்தாலும் ஆரோ ஒரு மாபியாவுக்கு மேலதான் விழோணும் போல. கொஞ்ச நாளைக்கு முதல் எல்லாரும் மருத்துவமாபியா பற்றி அறம்புறமா கதைச்சவை. இப்ப அப்பிடியே அதை மறந்திட்டினம்.எல்லாரும் மருத்துவமாபியா எண்டா டாக்குத்தர்மாரைத்தான் நினைக்கினம். ஆனால் உண்மை வேற. டாக்குத்தர்மாரெல்லாம் தங்களை அறியாமலே மாபியாக்களின்ர வலையில சிக்குப்பட்டிருக்கிற ஆக்களே தவிர, உண்மையான மருத்துவ மாபியாக்கள் வேற வேற பதவியளில, வேற வேற உருவங்களில இருப்பினம். அவ்வளவு ஏன், மருந்து விக்கிற கொம்பனியள், அதில வேலை செய்யிற ஆக்கள்தான் கூட மாபியாக்களா இருக்கினம்.

பிரைவேட்டா கிளினிக் வைச்சிருக்கிற டாக்குத்தர் மாரிட்ட வருத்தமெண்டு மருந்தெடுக்கப் போகேக்க, அங்க உங்களுக்கு முதலே ரை கட்டி, சப்பாத்து போட்டு, கையில ஒரு சின்ன சூட்கேஸோட 'ரிப்டொப்பா' சிலர் இருக்கிறதைக் கண்டிருப்பியள். வருத்தக்காரரை டாக்குத்தர் பார்த்துக்கொண்டிருக்கேக்க , இடைக்குள்ள இவையள் நுழைஞ்சு உள்ளுக்க போய் டாக்குத்தரோட கனநேரமாக கதைச்சுப் போட்டு, சிரிச்சுக்கொண்டு வெளியில வாறதையும் பார்த்திருப்பியள். இவையள் மருந்து விக்கிற கொம்பனியைச் சேர்ந்த ஆக்கள். டாக்குத்தர்மார்,நோயாளியளுக்கு மருந்து எழுதிக்குடுக்கேக்க தங்கட கொம்பனி மருந்தை எழுதிக் குடுக்கச் சொல்லி இவையள் டீல் பேசுவினம். அதுக்கு சில டாக்குத்தர்மாரும் ஓமெண்டுவினம். ரண்டு பகுதிக்கும் லாபம் தானே. ஆனால் சனம் தான் டாக்குத்தர் எழுதித்தந்த மருந்தைப் போட்டால்தான் வருத்தம் மாறுமெண்டு , விலையைக் கூடக் குடுத்தெண்டாலும் அந்த மருந்துகளை வாங்கிப் பாவிக்க வேண்டியிருக்கும்.

இப்பிடி பிரைவேட் கிளினிக்குகளில மட்டும் உலாவித்திரிஞ்ச இந்த மருந்துவிக்கிற ஆக்கள், இப்ப அரசாங்க ஆஸ்பத்திரியளுக்கையும் வர வெளிக்கிட்டிட்டினம். ஒவ்வொரு ஏரியாவிலையும் இருக்கிற ஆதார ஆஸ்பத்திரியளில பெரிய டாக்குத்தர்மார் வாற நாள்களில இந்த மருந்து விக்கிறவை மத்தியான நேரங்களில வந்து குவியினம். சனங்கள் வெளியில காவல் இருக்க, உள்ளுக்க டாக்குத்தர்மாரோட இவையள் போய் டீல் கதைக்கினம் எண்டு வருத்தக்காரர் முறைப்பாடு சொல்லுகினம். காசுக்கு மருந்து விக்கிறவைக்கு அரசாங்க ஆஸ்பத்திரியில அலுவல் இல்லையே. அவை விக்கிறதெண்டால், பிரைவேட் ஆஸ்பத்திரியில விக்கலாம், இப்பிடி இலவசமா மருந்து குடுக்கிற இடங்களில அவையள் டாக்குத்தர்மாரை வளைச்சுப்போட்டால் என்ன நடக்கும்? 'இந்த மருந்து இஞ்சையில்லை. வெளியிலதான் வாங்கோணும்' எண்டு ஆஸ்பத்திரியில டாக்குத்தர்மார் எழுதிக்குடுத்திடுவினம். ஆனால் அந்த வருத்தத்துக்கு போடுற இலவச மருந்து ஆஸ்பத்திரியில இருக்கும். எண்டாலும் மருந்துக்கொம்பனியின்ர லாபத்துக்காக சனங்கள் தங்கடகாசைக் கொட்டிக் குடுக்கவேண்டியது தான்.

முக்கியமா, வலிகாமத்தில் இருக்கிற ஆதார ஆஸ்பத்திரியில தான் இப்பிடி மருந்துவிக்கிறவை ஒவ்வொரு நாளும் படையெடுக்கினமாம். ஒருக்கா ஆஸ்பத்திரி நிர்வாகம் இதைப்பற்றி நடவடிக்கை எடுத்தால் நல்லது.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை-பருத்தித்துறை வீதியை புனரமைத்து தாருங்கள்

## பிரதேச மக்கள் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

**யாழ்ப்பாணம், டிசெ.21**

**நீண்டகாலமாக சிதைவடைந்து குண்டும் குழியுமாக காணப்படும் பொன்னாலை - பருத்தித்துறை இடையேயான 763 வழித்தட வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அடையாள உண்ணாவிரதம் மற்றும் கையெழுத்து வேட்டை நாளை ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையில் இடம்பெறவுள்ளன.**

வல்வெட்டித்துறை பிரதேசத்துக்குட்பட்ட சமூகமட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த வீதியின் தொண்டைமானாறு பாலம் முதல் பருத்தித்துறை துறைமுகம் வரையான பகுதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இடையேயான 751 மற்றும் பருத்தித்துறை - கீரிமலை இடையேயான 763 வழித்தட பேருந்து சேவைகள் குறித்த வீதியூடாகவே இடம்பெற்று வருகின்ற நிலையில் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பெருமளவான மக்கள் போக்குவரத்தில் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே வீதியின் புனரமைப்பின் அவசியத்தை அரசுக்கு தெரியப்படுத்தும் முகமாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

# சைவசமய மாநாடும் நூல் வெளியீடும்




மகாராஜா ஸ்ரீராஜசேகராவின் 'கந்தைவேள் காதை' நூல் வெளியீடும், சைவசமய மாநாட்டு விழாவும், மதுரவாசீகர் சிவஸ்ரீ சு.குமாரசுவாமி நாதக்குருக்கள் தலைமையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறை முதுநிலை விரிவுரையாளர் இளையதம்பி ஜெயேந்திரன் நூலை வெளியிட்டு வைக்க ஓய்வுநிலை கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி நூலின் ஆய்வுரையை ஆற்றுவார். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை ஆற்றுவார்.

யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை விரிவுரையாளர் ம.பாலகயிலாசநாதக்குருக்கள் சிறப்புரையாற்றுவார்.

நிகழ்வில் இணுவையூர் வில்லிசைக் குழுவினரின் 'வள்ளி திருமணம்' வில்லிசைப் பாடலும் இடம்பெறும். (ச-25-10)



# வவுனியா விவசாயிகளுக்கு உரக்கொடுப்பனவு இல்லை

வவுனியா, டிசெ.21

வவுனியாவில் பல விவசாயிகளுக்கு இதுவரை உரத்துக்கானன கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற உரத்துக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாமையினால் விவசாயிகள் தொடர்ந்தும் கடன் பெற வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில் விவசாயிகளினால் உரத்துக்கான பதிவுகள் அனைத்தும் கமக்கார அமைப்புகளின் ஊடாக பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும் வவுனியாவில் உள்ள பல விவசாயிகளுக்கு இதுவரை கொடுப்பனவு கிடைக்கப்பெறாத நிலைமை காணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-110)

# 'றோமியோ, ஜூலியற்' யாழில் திரையிடல்

யாழ்ப்பாணம், டிசெ.21

ஜிறி வெய்ஸ் இன் நெறியாள்கையில் 1960 இல் வெளிவந்த றோமியோ ஜூலியற் அன்ட் டாக்னஸ் (றோமியோவும், ஜூலியற்றும், இருளும்) எனும் ஆங்கிலத் திரைப்படம், தந்தை செல்வா கலையரங்கில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

1942 இல் ஜேர்மன் நாஸிகள் செக்கோஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்த போது, பிரேக் நகரில் அநாதரவான பெண்ணுக்கு செக் இளைஞன் அடைக்கலம் கொடுப்பதை மையமாகக் கொண்ட இந்தத் திரைப்படம், இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

# ஆண்டுநிறைவும் ஒளிவிழாவும்

யாழ்ப்பாணம், டிசெ. 21

விது நம்பிக்கை நிதியத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவும், மாற்றாற்றல் உடையோருக்கான ஒளிவிழாவும் யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில், நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிதியத்தின் பணிப்பாளர் விஜிதா நாகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக அருள் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் இரா.அருட்செல்வம், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சோ.இராமநாதன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திரசேகரம், தெல்லிப்பழை வீமன்காமம் மகா வித்தியாலயத்தின் உப அதிபர் ம.ரவீஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உணவு விஷயத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்னை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு உடல் ஆரோக்கியம் சிறிய அளவில் பாதித்தாலும் உடனே நிவாரணம் கிடைத்து விடும்.

**மிதுனம்:** ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக் கூடும்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகச் செயல்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு புதிய

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்னை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**மகரம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும். தந்தை வழி உறவுகளால் அலைச்சலும் செலவும் ஏற்படும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவர் தேவையை மற்றவர் நிறைவேற்றி மகிழ்வீர்கள். மாலையில் வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறக்கூடும்.

**மீனம்:** ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நீங்கள் உங்கள் சிறகுகளை விரிக்கும் வரை, உங்களால் எவ்வளவு தூரம் பறக்க முடியும் என்று உங்களுக்கே தெரியாது.

– நெப்போலியன் –

## என்ன வளம் இல்லை எங்கள் நாட்டில்?

2016ஆம் ஆண்டுவரை கட்டாரில் ஒரு பாற்பண்ணை கூட கிடையாது. தன் பால் தேவைக்காக அது முற்றிலும் சவூதி அரேபியாவையே சார்ந்திருந்தது. ஆனால், தற்போது கட்டாரில் உள்ள பால்ட்னா பண்ணையில் 10 ஆயிரம் கறவைப் பசுக்கள் உள்ளன. அவற்றில், பெரும்பாலானவை அமெரிக்காவிலிருந்து வரவழைக் கப்பட்டவை. இன்று கட்டார் பாலுற்பத்தியில் தன்னிறைவு பெற்ற பாலைவன நாடாகத் திகழ்கின்றது. போதாததற்கு, அவ்வப்போது பால் ஏற்றுமதியிலும் ஈடுபடுகின்றது. 'அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே' என்பது எவ்வாறு குடியரசின் கொள்கையோ, அவ்வாறாக, 'நாமே உற்பத்தியாளன்' என்பது கட்டாரின் கொள்கை. அதனால்தான், வளைகுடா நாடுகளின் பகைகள், தடைகள் என்பவற்றையும் தாண்டி அந்தப் பாலைவனத் தேசம் தலைநிமிர்ந்து நிற்கின்றது. உற்பத்தி என்பதும், தன்னிறைவு என்பதும் ஒரு நாடு உயிர்ப்புடன் இருப்பதற்குத் தவிர்க்கமுடியாத விடயங்கள். இலங்கை இதுவரை தவறவிட்டதும் அவற்றைத்தான். ஆதலால்தான், அனைத்துவகையிலும் தன்னிறைவு காணக்கூடிய நிலையில் இருந்தபோதிலும், திவாலடைந்தது இலங்கை. தற்போது இந்த பாரம்பரிய பழைய முறையிலான அரசியலுக்கும், பொருளாதாரக் கொள்கைக்கும் முற்றுப்புள்ளி வைத்து, புதிய இரத்தத்தைப் பாய்ச்சுவதற்கு ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எத்தனிப்பதை அவதானிக்க முடிகின்றது.

பால் இறக்குமதிக்காக வெளிச்செல்லும் பணத்தைத் தவிர்ப்பதற்காகவும், பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்காக பாகிஸ்தானில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் கறவைப் பசுக்களை இறக்குமதி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்திருக்கின்றது அநுர அரசாங்கம். எழுந்துநின்று வரவேற்கக்கூடிய விடயம் இது. ஆனால், உள்ளூர் பாலுற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாதவாறு அவர்களுக்கு நியாயம் செய்து இந்த ஆக்கபூர்வமான திட்டத்தை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்கவேண்டும். ஏற்கனவே இங்கு பாலுற்பத்தியில் ஈடுபட்ட பண்ணையாளர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் யாவை? அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகள் என்ன? என்பதைக்கண்டறிந்த பின்னரே பசுக்களின் இறக்குமதிக்குச் செல்லவேண்டும். இல்லாவிட்டால், இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களாலும் பயன் கிடைக்காமல் போய்விடும்.

இதைவிட முக்கியமான ஒரு விடயத்தையும் இந்த அரசாங்கம் கவனத்திற் கொள்ளவேண்டும். மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் இடம்பெறுவதைப் போன்ற ஆக்கிரமிப்புகளால் ஏராளமான கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாலுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. 'ஆக்கிரமிப்பு மனோபாவத்தால்' உள்நாட்டுப் பாலுற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும் சமநேரத்தில், அரசாங்கம் இவ்வாறான அபிவிருத்திகளை மேற்கொள்ளும்போது அவை அர்த்தமற்றதாகிவிடும். எனவே, மயிலத்தமடு பண்ணையாளர்களின் பிரச்சினைக்கும் தீர்வு வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும். பாலுற்பத்தியைப் போன்று இலகுவாக தன்னிறைவு காணக்கூடிய ஏராளமான விடயங்கள் இலங்கையில் உள்ளன. அள்ளஅள்ளக் குறையாத மீன்கள் உள்ளன. ஆனால், அதன் பயன்களை அடியோடு அறுவடை செய்வது அத்துமீறும் தமிழக மீனவர்களே. எனவே, மீன்பிடியிலும், ஆகச்சிறந்த சந்தை வாய்ப்புகளை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். மட்டுமல்லாமல், கோழி வளர்ப்பு, தானிய உற்பத்தி என்று நாம் தன்னிறைவு காணவேண்டிய பட்டியல் மிக நீட்சியானது. 21ஆம் நூற்றாண்டில் தன்னிறைவுப் பொருளாதாரம்தான் ஒரு நாட்டின் இருப்பை உறுதி செய்யும். அதிலும், தீவு நாடு என்ற வகையில், தன்னிறைவுப் பொருளாதாரத்தை இறுகப்பற்ற வேண்டிய கட்டாயத் தேவை இலங்கைக்கு இருக்கவே செய்கின்றது. தொலைநோக்கோடு செயற்படட்டும் அரசாங்கம்.



# கூட்டுறவுத் துறையில் பல இலட்சம் மோசடி

**கொழும்பு, டிசெ.21**
**கூட்டுறவுத் துறையில் கடந்த 20 வருடங்களாக பல இலட்சம் ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் 700க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் கூட்டுறவுத் துறை, சமூகச் செயற்பாட்டாளரும், தொழிற் சங்கவாதியுமான டி.கே. கீர்த்தி திஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

கூட்டுறவுத்துறையில் உள்ள ஒரு சில அதிகாரிகளின் நடவடிக்கை காரணமாக கூட்டுறவுத் துறை மிகவும் பாதிப்படைந்துள்ளது. கடந்த 20 வருடங்களாக கூட்டுறவுத் துறை தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் சுமார் 700 முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ள போதிலும் அவை தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

புதிய அரசு மக்களுக்கு நியாயம் வழங்கும் என பொது மக்கள் எதிர்பார்த்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளதால் தற்போதைய அரசாவது இதற்கு ஒரு நியாயம் பெற்றுத் தரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம்

கொழும்பு, டிசெ.21
எதிர்வரும் நத்தார் மற்றும் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மக்கள் அதிகம் கூடும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் திருடர்கள் மற்றும் குற்றவாளிகளை அடையாளம் காண சிவில் உடையில் 500க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ச-இ)


## தனியார் பட்டப்படிப்பு நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தல்

கொழும்பு, டிசெ. 21
தனியார் பட்டப்படிப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் தேவை எனவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு இடையிலான இடைவெளியை இல்லாமலாக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், அதை தமது தொழிலையும் தாண்டிய ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதி செயற்படுமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். மோசடியான பட்டப்படிப்பு நிறுவனங்களிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், அதற்கான சட்டக் கட்டமைப்பு மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் தரம் குறித்தும் சிறந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

## கிரிக்கெட் யாப்பில் திருத்தம்

இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தில் நேற்று நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் (EGM) கிரிக்கெட் யாப்பில் விசேட திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 147இல் இருந்து 60 ஆகக்குறைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)




## மின்சாரசபைக்கு 150 மில். டொலர்

கொழும்பு, டிசெ.21
ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கை மின்சாரசபையின் திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட 150 மில்லியன் டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை பயன்படுத்தி நாட்டின் மின்சார அமைப்பின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்த பல அத்தியாவசிய திட்டங் களை மேற்கொள்ள மின்சாரசபை திட்டமிட்டுள்ளது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 10 . 1924

மறைவு 15 . 12 . 2024

## தம்பு இராமலிங்கம் (ராசதுரை)

(பிரபல வர்த்தகர் - இராமலிங்கம் ஸ்ரோர்ஸ்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராமலிங்கம் (பிரபல வர்த்தகர் - இராமலிங்கம் ஸ்ரோர்ஸ்) அவர்கள் கடந்த 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கால்ஞ்சென்றவர்களான சீனிவாசகம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம் (UK), சர்வலோகநாயகி (சர்வா- (UK), யோகநாதன் (நேரு- Canada), சாந்தி (Canada), ஸ்ரீஸ்கந்தராஜா (காந்தன் Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெய்ஜாம், சாந்தி, விஜயராணி, மஞ்சு, காலஞ்சென்ற மார்க்கண்டேயவாசகர் (சோமு), சந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்புச் சகோதரரும், மலரின் மைத்துனரும், ஜெசி - நந்தன், ஜெய்சன் - தேவகி, ஜெனி - ஸ்கொட், வதீசன் (வேவா) - கவித்ரா, வசீத்ரா (லாலா) - பிரபாகரன், பிரியா - அகிலன், மைதிலி - அல்டோஸ், மயூரி, ஆர்த்தி - செந்தூரன், பிரிந்தா - பிரதாபன், அனுஜ் (ராஜ்) - தான்யா, துர்க்காதரன், நிமல்ராஜ் (வசந்தன்) - சுலோச்சனா, யதீஸ்வரன், கஜேந்திரன், நிஷானி - துஷாந், சஹானா - அபிநாத், சபிர்னா - மிதுன் ஆகியோரின் அருமைப்பேரனும், நிஷானன், ஜெனுஷன், அனுஷன், சியானா, அஷாந், அஸ்வினி, அபினேஸ், ஆகாஷ், திவ்யா, மகேஷ், ஈஸ்வரி, கர்ஷன், அர்ஜுன், மீனாட்சி, கவிஷ், அரிஷ், ஆன்மீரா, கோடீஸ்வரன், அனன்யா, ரியான் ஆகியோரின் அருமை மிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.12.2024) சனிக்கிழமை அச்சுவேலியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி தீத்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வசாவிளான் வீதி,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

தனபால் (மகன்) +44 742 471 5731
காந்தன் (மகன்) +1416 666 9995
நேரு (மகன்) +147 6725 0643
சந்திரா (மருமகள்) 076 090 1722
சர்வா (மகள்) 076 986 2810

(Cr/43933) N-1

# ஒருங்கிணைப்புக் கூட்டம் கேலி செய்யும் இடமல்ல!

டக்ளஸ் தெரிவிப்பு

யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நான் இருந்திருந்தால் அரச அதிகாரிகளைக் கேலி செய்யும் முகமாக கருத்துத் தெரிவித்த வரை சபையில் மன்னிப்புக் கோர வைத்திருப்பேன். அல்லது அவரை சபையில் இருந்து வெளியேற்றி இருப்பேன் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயற்பாடு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளின் முறை பிழையானது. இங்கு கல்வித் தகைமை என்பதனை விட அனுபவமும் மக்கள் நலன் சார்ந்த சிந்தனை உடையவர்களுமே தேவை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-22,20)


## நல்ல நிலையில் உள்ள பாவித்த தளபாடங்கள் விற்பனைக்கு

- மரப் பெட்டகம் (முதிரை) 5'x3' 01 Nos
- இரண்டுவெளி யன்னல் கதவுடன் (மகோகனி) 4'x3' 03 Nos
- கிணற்று மூடி (GI பைப்பிலானது) 8'x8' 01 Nos
- கதவுகள் (வேம்பு) 6'x3' 05 Nos

(CS/29469) J-1

தொடர்பு:- 077 498 0404
காலை 8 மணி - மாலை 6 மணி வரை


# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 15 . 06 . 1957

உதிர்வு 20 . 12 . 2024

## அமரர் கந்தையா மகாராசா


பிரான்ஸ் பரிஸைச் சேர்ந்த எனது ஆருயிர் நண்பன் மகாராசா துசீபன் அவர்களின் பாசமிகு தந்தை அமரர் கந்தையா மகாராசா (வசாவிளான் தெற்கினை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்டவர்) அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
த.நிலோசன் (பிரான்ஸ்-பரிஸ்)

(CS 56975) V-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 07 . 1952

மறைவு 18 . 12 . 2024

## காசிநாதர் வர்ணகுலசிங்கம் (வெள்ளை அண்ணா)

இல 21, கன்னாரலேன், நல்லூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட காசிநாதர் வர்ணகுலசிங்கம் அவர்கள் கடந்த (18.12.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ஹேரசிகா, பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. தினேஷ்கரன், திரு. அரசகுமார் ஆகியோரின் மாமனாரும், திரு. பாலசுப்பிரமணியம், திருமதி தங்கபூபதி பாலேந்திரன், திரு. தியாகராஜா, திரு. மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

இல 21, கன்னாரலேன்,
நல்லூர்.

072 442 0306 (Whats App),
077 691 3203

(CS/56964) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 08 . 1948

மறைவு 13 . 12 . 2024

## மயிலுப்பிள்ளை புவனேஸ்வரி

பெரிய அரசடி சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மில் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை மற்றும் ஒட்டாவா, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மயிலுப்பிள்ளை புவனேஸ்வரி கடந்த 13.12.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயிலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சுதாகரன் (கனடா), தேவதர்சன் (லண்டன்), மகிந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவபாலன், ஸ்ரீதரன் மற்றும் ஈஸ்வரதாஸ் (இலங்கை), லோகேஸ்வரி (ராணி - இலங்கை), கமலேஸ்வரி (கமலா - இலங்கை), மனோகரன் (ஆஸ்திரேலியா), இரஞ்சிதன் (கனடா), பாஸ்கரன் (பிரான்ஸ்), ஸ்ரீகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயமோகனச்செல்வி (விஜி - மீனா), சூரியப்பிரியா (பிரியா), சுகி ஆகியோரின் அன்பு மாமியாரும், இலக்யா, ஸ்ரேயன், தேனுஷன், ஆதிரா, மித்ரா, சித்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் தவமணி, குமாரசாமி, தேவகி, வத்சலா, ஸ்ரீவதனி, ஆனந்தராணி, பாலநந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை Capital Funeral Home & Cemetry - 3700 Prince of Wales Drive, Nepean, Ontario, K2C3H1, Canada வில் காலை 10.00மணிமுதல் மதியம் 1.00 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்ப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தொடர்புகளுக்கு:

சுதாகரன் - +1613 889 8590
தேவதர்சன் - +44 7415 44 1207
மகிந்தன் - +41 76 749 2015

தகவல்:
குடும்பத்தினர்

(Cr/43926) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயரிகள் மதிக்கப்படுவர்

கொழும்பு, டிசெ.21
சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து கிடைக்கப் பெறும் 3 பில்லியன் டொலரைக் காட்டிலும் புலம் பெயர்ந்து வாழும், தொழில் புரியும் எமது உறவுகளிடமிருந்து அதிகளவான அந்நிய செலாவணி கிடைக்கப் பெற்றுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியில் குடும்ப பண அனுப்பல்களின் பெறுமதி 4.48 பில்லியன் டொலராகக் காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியின்போது புலம்பெயர்ந்தோர் அந்நிய செலாவணி ஊடாக இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்காமல் இருந்திருந்தால் நெருக்கடி மேலும் தீவிரமடைந்திருக்கும்.


நாட்டின் பொருள்ாதாரத்தை மேம்படுத்தும் இவர்களை மதிக்க வேண்டும். அவர்களின் உழைப்புக்கு உரிய கௌரவம் வழங்கப்படவேண்டும்.

அதேவேளை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார். இது மக்களின் அரசாங்கம் ஆகவே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவோம் - என்றார். (ச-இ)

# அரிசி இறக்குமதி காலஅவகாசம் நீடிப்பு

**கொழும்பு, டிசெ.21**
**அரிசியை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதிவரை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**



எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அது தொடர்பான இறுதி உடன்பாடு எட்டப்படவுள்ளது.

இதன்படி, அரிசி இறக்குமதியை நீடிப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பு எதிர்வரும் 24ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை அரிசி ஏற்றுமதிக்கு அரசாங்கம் வழங்கிய கால அவகாசம் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வவுனியாவில்
# வாயுத் துப்பாக்கியால் நாய் சுட்டுக்கொலை

வவுனியா, டிசெ.21
வவுனியா மருத்துவமனையில் நாய் ஒன்று நேற்று வாயு துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மருத்துவமனையில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே சுட்டுக்கொலை செய்துள்ளார்.

மருத்துவமனையில் பிரேத அறையருகில் நின்ற நாய் மீதே சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் நாய் காப்பக உரிமையாளர் ஒருவர் மருத்துவமனை பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இது குறித்த விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-110)

## வன்கொடுமையால்
# பாதிக்கும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லங்கள்!

கொழும்பு, டிசெ.21
வன்முறைகளால் பாதிக்கப்படுகின்ற பெண்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காகத் தற்காலிக பாதுகாப்பு இல்லங்களை நிர்வகிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2020 தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை இரண்டாம் காலாண்டு வரை 2852 பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 60.35 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. ஆனாலும், குறித்த காலப்பகுதியில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுக்கு 37.69 மில்லியன் ரூபா மாத்திரமே நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தபால் சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.21
நெடுந்தீவுக்கான தபால் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக யாழ்.பிரதேச தபாலகம் தெரிவித்துள்ளது. கடுங்காற்று, மழை காரணமாக இந்தப்பிரதேசத்துக்கான தபால் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச- 25, 17)

# அதிக விலைக்கு அரிசி வியாபாரிகளுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ.21
கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ்பாணம் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய சாவகச்சேரி நீதிமன்ற எல்லைக்குட்பட்ட 13 வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத் தில் கடந்த புதன்கிழமை விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை செய்த மூவரும், விலைப்பட்டி யலை காட்சிப்படுத்தாத ஒருவரும், உரிய லேபில், உத்தரவாதம், இறக்குமதி சான்றிதழ் இல்லாது பொருள்களை விற்பனை செய்த ஐவரும் அடங்கலாக 9 வர்த்தகர்களுக்கு மொத்தமாக 34 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. ஏனைய வர்த்தகர்களுக்கு எதிரான வழக்குகள் அடுத்த தவணையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (ச-25, 28)

# இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.21
இம்மாதம் 8ஆம் திகதி அதிகாலை நெடுந்தீவு கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 8 பேருக்கும் எதிர்வரும் 27 வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவை பிறப்பித்தார். (ச-27)

# சீனாவுக்கு குரங்குகள் திட்டம் எதுவுமில்லை

கொழும்பு, டிசெ.21
குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் தற்போதைய அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

குரங்குகள் தொடர்பான பிரச்சினை குறித்து விவசாய அமைச்சு அவதானம் செலுத்தி அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. சூழல் சமநிலையின்மையால் இந்தப் பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது.

இதுதொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான யோசனைகள் நீண்டகால திட்டங்களாகும்.

குரங்குகள் போன்ற மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விலங்குகளை நாட்டின் வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லல் அல்லது இனப்பெருக்கக் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகள் குறித்தே அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மாறாக குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து கலந்துரையாடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ச-22,44)

# ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றவர்களின் அடுத்த பட்டியல்

கொழும்பு, டிசெ.21
ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்களின் விவரங்களும் விரைவில் வெளியிடப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அரசியல்வாதிகள் ஒரே தடவையில் ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை காசோலையாகப் பெற்றுள்ளனர். ஆனால் பொதுமக்களுக்கு ஐந்து இலட்சம் ரூபா பல தவணைகளாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பழம் விலையேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென அதிக ரித்துள்ளது.

கடந்த வாரத்தில் கிலோ 50 ரூபாவாக விற்கப்பட்ட கதலி வாழைப்பழம் தற்போது 100 ரூபா வரை அதிகரித்துள்ளது.

நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு வாழைப்பழத்தின் விலை அதிகரித்திருப்பதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(ச-25, 17)

**நல்லூர் கந்தன் திருமண சேவை**

எம் அன்பார்ந்த உறவுகளுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

எம் திருமண சேவையில் உள்நாட்டு மணமக்கள், வெளிநாட்டு மணமக்கள் உத்தியோகம், உத்தியோகம் இல்லாதது வெளிநாட்டு மணமகள்கள் கைவசம் உள்ளனர். எவ்விதமாயினும் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: **077 973 3183**

**Chundikuli Girls' College, Jaffna**

**VACANCIES**

Applications are invited from suitable candidates for the below vacancies

1. Teacher of English for A/L and English Literature for O/L
2. Hostel Matron (Female)
3. Nurse (Female)

Apply before 10 th January 2025 with the names of two non related referees.

Only short listed candidates will be called for an interview


The Principal
Postel Address:
6, Colombogam Road,
Chundikuli,
Jaffna.

Email: forwardcgc@yahoo.com

(cr 43915) (N-1)

தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி

# இழுத்து மூடப்படும் நிலையில் தே.எண்ணெய் நிலையங்கள்



கொழும்பு, டிசெ.21

**தேங்காய் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்களை விரைவில் இழுத்து மூடும் நிலை ஏற்பட்டுள்ளதாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது ஒரு தேங்காய் 200 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுவதுடன் தட்டுப்பாடும் நிலவுகிறது. இது தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் தாக்கம் செலுத்தியுள்ளதால் இதனை நம்பியுள்ளவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

பல இலட்சம் ரூபா பணத்தைச் செலவழித்து இயந்திரங்கள் பொருத்தி தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்து வந்த நிலையில் தற்பொழுது பல தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மூடும் நிலையில் காணப்படுகின்றன. எனவே எமது வாழ்வாதாரப் பாதிப்பை கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் எமக்கு நிவாரணம் வழங்க ஆவன செய்ய வேண்டும்- என்றனர்.

(ச-113)

# தொழிற்பயிற்சி கற்கைநெறி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.21

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் முதலாம் அரை ஆண்டுக்கான முழு நேர கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் ஆகிய பிரதேசங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துனர், மோட்டார் சைக்கிள் திருத்துனர், அலுமினியம் பொருத்துனர், கனிணி வன்பொருள் திருத்துனர், கனிணி வடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், பெற்றோல் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துனர் போன்ற கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவை தேசிய தொழில் தகைமை மட்டம் 4 சான்றிதழுக்கானவை. கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் உட்பட அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும் மேலதிக விவரங்களுக்கு 0212227949, 0710318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(ச-25)

**உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்**




**தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின்**
**நீண்ட கால கௌரவ தலைவரான**
**லயன் திருநாவுக்கரசு உதயசூரியன்**
**MJF MAF, JP**

அவர்கள் புதிதாக உதயமாகவுள்ள வட மாகாணத்திற்கான புதிய மாவட்டம் 306 D 12 இற்கான **முதலாவது உப மாவட்ட ஆளுநராக** தெரிவு செய்யப்பட்டுள்ளமை எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கின்றது. இவ் உயர் பதவி இவரது கடின உழைப்புக்கு கிடைத்த பரிசாகவே நாம் கருதுகின்றோம். இவரை உளமார பாராட்டுவதுடன் **இவரது பதவிக்காலம்** 01.07 2025 **இல் ஆரம்பித்து எதிர்வரும் மூன்று வருடங்கள் சிறப்பாக மாவட்டத்தை** வழிநடத்தி சிறப்பாக இயங்க வைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**தொல்புரம் கிழக்கு மக்கள் சார்பாக**
**தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், சுழிபுரம்.**

(cr 43932)(N-1)

**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
**உற்பத்திமுகாமையாளர் (ஒப்பந்தம்) பதவி**

எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் ரூபா20/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 31.12.2024 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதவி: உற்பத்தி முகாமையாளர் (ஒப்பந்தம்)
சம்பளம்: பொருத்தமான சம்பளம் வழங்கப்படும்.

**தகைமைகள்:**

(1) B.Sc in Agriculture (hons) (Specialized in Food Science or Animal Science)

அல்லது

B.Sc in Food Science and Technology (hons)

அல்லது

Bachelor of Bio systems Technology (hons) (Specialized in Food Production Technology)

அல்லது

Any other Relavant Degree in Food Science and Animal Science

(2) ஆங்கிலத்தில் தேர்ச்சி (எழுத, வாசிக்க) மற்றும் சிங்களம் பேசத் தெரிந்திருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(3) கணினி அறிவுடையவராயிருத்தல் விரும்பத்தக்கது.

**பொது நிபந்தனைகள்:**

1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

தலைவர்
21.12.2024

(CR/43937) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுக்கு முழுமையான உதவி

## அமெரிக்கா அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

இலங்கை அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவை, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போதே, இலங்கை அரசாங்கத்துக்கு முழுமையான உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும், எதிர்காலத்திலும் இந்த ஒத்துழைப்புத் தொடரும் என்றும் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான தூதரக உறவுகளை மேலும் வலுப்படுத்த தயாராக இருப்பதாகத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாக மாறவேண்டும் என்பது அமெரிக்காவின் எதிர்பார்ப்பு என்றும் கூறியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டுவரும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை வெகுவாகப் பாராட்டுவதாகவும், சட்டமும் ஒழுங்கும் இலங்கையில் வலுவாக நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் ஜூலி சங் மேலும் தெரிவித்துள்ளார். (ம-இ)





# மாவட்ட உற்பத்தித்திறன் பொலிஸார் பார்வையிடல்

கிளிநொச்சி, டிசெ. 21

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உற்பத்தித்திறன் சார்ந்த செயற்பாடுகளை இராமநாதபுரம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர். அதில் இராமநாதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிளிநொச்சி மாவட்ட செயலக உற்பத்தி திறன் பிரிவின் மாவட்ட இணைப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-25, 113)

# AIA யாழ்ப்பாணக் கிளையானது அவர்களின் 15வது ஆண்டு நிறைவை ஆயுள் பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர் அங்கீகாரத்திற்கான அர்ப்பணிப்புடன் கொண்டாடியது.





17 நவம்பர் 2024: AIA இன்சூரன்ஸின் யாழ்ப்பாணக் கிளையானது, சமூகத்திற்கான 15 வருட சேவையைக் குறிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை, அண்மையில் பிரதான முகவர் அதிகாரி சானக லியனகே கலந்துகொண்ட விசேட ஆண்டு நிகழ்வில் கொண்டாடியது. இந்த கொண்டாட்டமானது கிளையின் சாதனைகள் மற்றும் வளர்ச்சியை அங்கீகரித்த முக்கிய வாடிக்கையாளர்களை கௌரவித்தது மட்டுமின்றி யாழ்ப்பாணம் மற்றும் அதற்கு அப்பால் உள்ள குடும்பங்களுக்கு ஆயுள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு நிதிப் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் நல்வாழ்வுக்கான தீர்வுகளை வழங்கி மிகவும் முக்கியமானவற்றைப் பாதுகாக்க உதவுவதில் AIA இன் அர்ப்பணிப்பினை இந்த ஆண்டுவிழா பிரதிபலித்திருந்தது.

2009 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கிளையானது, குறிப்பிடத்தக்க மீள்தன்மை மற்றும் வளர்ச்சியை வெளிப்படுத்திய ஒரு பிராந்தியமான வடக்கு மாகாணத்தில் அதன் எல்லையை விரிவுபடுத்துவதற்கான AIA இன் ஆரம்ப முயற்சிகளில் ஒன்றாகும். கடந்த 15 வருடங்களாக யாழ்ப்பாணக் கிளை அதன் உள்ளூர் இருப்பை வலுப்படுத்தி, அவர்களின் பாதுகாப்பு தேவைகளை நிவர்த்தி செய்யவும், நீடித்த நம்பிக்கையை உருவாக்கவும் குடியிருப்பாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றுகிறது. வாழ்க்கையின் நிச்சயமற்ற நிலைகளில் குடும்பங்களை ஆதரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறிய குழுவில் இருந்து, நிதிப் பாதுகாப்பையும் மன அமைதியையும் வழங்கும் யாழ்ப்பாண சமூகத்தின் முக்கிய அங்கமாக இக்கிளை வளர்ந்துள்ளது.

"யாழ்ப்பாணத்தில் உள்ள எங்கள் AIA குழு சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கு அயராது உழைத்துள்ளது மற்றும் காப்பீட்டுத் தயாரிப்புகளை விட அதிகமானவற்றை வழங்குகின்றது. இங்குள்ள குடும்பங்களுக்கு உண்மையிலேயே முக்கியமானது என்ன என்பதைப் புரிந்துகொண்டு, நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வின் அடிப்படையில் உறவுகளை கட்டியெழுப்புவதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்று சானக லியனகே கூறினார். "நாங்கள் 15 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இத்தருணத்தில், இந்த உறவுகளை ஆழமாக்குவதற்கும், குடும்பங்கள் தங்கள் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு உதவும் தீர்வுகளைத் தொடர்ந்து வழங்குவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்." என தெரிவித்தார்.

**யாழ்ப்பாணக் கிளையின் ஆரம்பம் முதல் அதன் ஒரு அங்கமாக இருந்துவரும் வடக்கு கிழக்கு பிராந்தியத்தின் மாகாண முகாமையாளர் திரு கந்தசாமி செல்வராஜன், கிளையின் பயணம் குறித்து கருத்து தெரிவிக்கையில்,** "இந்த 15 வருட மைல்கல் எமது AIA குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு சான்றாகும். சமூகத்தால், வடமாகாணத்தின் தனித்துவமான தேவைகளைப் புரிந்துகொள்வதிலும், அந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் எமது தீர்வுகளைத் தயாரிப்பதிலும் ஆரம்பத்தில் இருந்தே நாம் கவனம் செலுத்தி வந்தோம். கிளையின் வளர்ச்சியையும், குடும்பங்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் அதன் பங்கையும் நேரில் பார்ப்பது ஒரு பாக்கியமாகும்' என குறிப்பிட்டார்.

கிளையின் வளர்ச்சிக்கு அதன் விதிவிலக்கான குழுவால் மட்டுமல்ல, உள்ளூர்வாசிகள் மற்றும் நிறுவனங்களுடன் அது வளர்த்துள்ள வலுவான கூட்டாண்மைகளும் காரணமாகும். சமூகத் தலைவர்களுடன் செயலூக்கத்துடன் ஈடுபடுவதன் மூலமும் உள்ளூர் முன்னுரிமைகளைப் புரிந்துகொள்வதன் மூலமும் யாழ்ப்பாணக் கிளையானது பாதுகாப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகள் இரண்டையும் நிவர்த்தி செய்யும் வகையில் தனது சலுகைகளை வடிவமைத்துள்ளது. இந்த மக்களை முதன்மைப்படுத்தும் அணுகுமுறை AIA யாழ்ப்பாண கிளையை பிராந்தியத்தில் நம்பகமான பெயராக மாற்றியுள்ளது, இது பலதரப்பட்ட மக்களுக்கு அணுகக்கூடிய விரிவான மற்றும் நம்பகமான தீர்வுகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

MDRT (Million Dollar Round Table) உறுப்பினர்களின் வலுவான பிரதிநிதித்துவம் யாழ்ப்பாணக் கிளையின் சிறப்பான சாதனைகளில் ஒன்றாகும். நெறிமுறை தரநிலைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவையில் சிறந்து விளங்குவதற்கான அவர்களின் சிறந்த செயல்திறன் அர்ப்பணிப்புக்காக இந்த உயர்நிலை நிபுணர் குழு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண MDRT உறுப்பினர்களுக்கு மேலதிகமாக கிளிநொச்சி, வவுனியா மற்றும் நெல்லியடி ஆகிய கிளைகளில் உள்ள MDRT உறுப்பினர்களும் முன்மாதிரியான சேவையை வெளிப்படுத்தியுள்ளனர் மற்றும் சமூகத்திற்கு சேவை செய்வதில் மேலே சென்று சேவையாற்றினார்கள் அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணிப்பான வழிகாட்டுதலையும் ஆதரவையும் வழங்குகின்றார்கள்.

2023 ஆம் ஆண்டிற்கான 2வது சிறந்த வெலத் பிளானர் கிளிநொச்சி கிளையினை பிரதிநிதித்துவப்படுத்தியதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேலும் இந்த ஆண்டு பிரான்சில் நடைபெற்ற புகழ்பெற்ற AIA President's Club நிகழ்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியமை அணிக்கு மகத்தான பெருமையை ஏற்படுத்தியது. இந்தச் சாதனையானது வடக்கு மாகாணத்தில் உள்ள வெலத் பிளானர்களின் திறமைக்கு ஒரு சான்றாகும். அவர்கள் AIA இன் சிறப்பு, ஒருமைப்பாடு மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட மதிப்புகளை பதிவேற்றம் செய்ய தொடர்ந்து முயற்சி செய்கின்றார்கள்.

MDRT அங்கத்துவம் மற்றும் AIA President Club அங்கீகாரத்தினை பெற்றமை எமது வெலத் பிளானர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின் உழைப்புக்கான ஒரு சான்றாகும்" என **சானக லியனகே** தெரிவித்தார். "யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் நெல்லியடியில் எங்களின் MDRT உறுப்பினர்கள், எங்களின் வாடிக்கையாளர்களுக்கு நேர்மை, திறமை மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் சேவை செய்வதற்கு AIA வெலத் பிளானராக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதற்கு எழுச்சியூட்டும் முன்மாதிரியை அமைத்துள்ளனர்." என்றார்.

இந்த ஆண்டு விழா நிகழ்வானது யாழ்ப்பாணத்தில் உள்ள AIA இன் பிரத்தியேக வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் ஒரு வாய்ப்பாகவும் அமைந்திருந்தது. வருடாந்த கட்டுப்பண பங்களிப்பு (ANP) ரூபா 04 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் காப்புறுதிதாரரர்கள் இவர்களாகும். இந்த பிரத்தியேகமான சேவை இந்த வாடிக்கையாளர்களின் நிதி எதிர்காலத்தையும், தங்களின் அன்புக்குரியவர்களின் நல்வாழ்வையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது. பிரத்தியேக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பலன்கள், அவர்களின் விசுவாசத்தை அடையாளம் கண்டு, அவர்கள் சிறப்பான சேவையையும் மதிப்பையும் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரத்தியேக வாடிக்கையாளர்கள், தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் முன்னுரிமை சேவைகள் உட்பட பல்வேறு சலுகைகளை AIA இன் சேவைக் குழுக்களிடமிருந்து பெறுகின்றார்கள். அவர்கள் வடிவமைக்கப்பட்ட நிதி வழிகாட்டுதலை பெறுகின்றனர். அவர்கள் முன்னுரிமை ஆதாரங்களுக்கான அணுகலைப் பெறுகின்றார்கள் மற்றும் AIA நிகழ்வுகளுக்கான பிரத்தியேக அழைப்பிதழ்களை பெறுகின்றனர். இது மேலும் புதிய சலுகைகளைப் பற்றி அறிந்திருக்கவும், நீண்ட கால நிதித் திட்டமிடலை மதிக்கும் ஒத்த எண்ணம் கொண்ட நபர்களின் பெரிய நெட்வொர்க்கின் ஒரு பகுதியாக இருக்கவும் நிபுணர்களுடன் ஈடுபட வாய்ப்பளிக்கிறது. கூடுதலாக, AIA இன் பிரத்தியேக வாடிக்கையாளர்கள் வாடிக்கையாளர்களாக மட்டுமல்லாமல், AIAஇன் பணியில் மதிப்புமிக்க பங்காளிகளாகவும் தங்கள் விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்புக்கான அங்கீகாரத்தைப் பெறுகின்றார்கள்.



ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களின் போது பிரத்தியேக வாடிக்கையாளர்களை அங்கீகரிப்பது, காப்புறுதியாளர்களுடன் உறவுகளை கட்டியெழுப்புதல் மற்றும் அவர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதன் மூலம், AIA அவர்களின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ஆயுள்பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்புக்கான அதன் பாராட்டுகளை அடிக்கோடிட்டு வெளிப்படுத்தியது.

யாழ்ப்பாணக் கிளையின் வெற்றியின் அடிப்படையானது ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்கான அதன் அர்ப்பணிப்பாகும். இந்நிகழ்வில் பிரதம முகவர் அதிகாரி சானக லியனகே தனது கருத்துக்களில், ஆயுள் பாதுகாப்பு என்பது ஒரு நிதி தயாரிப்பு மட்டுமல்ல, குடும்பங்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் ஒரு முக்கிய கருவியாகும் என்பதை எடுத்துக்காட்டினார்.

"ஆயுள் காப்பீடு என்பது இன்று தன்னம்பிக்கையுடன் வாழும் போது நாளைய தினத்திற்கு தயார் செய்வது" என்று அவர் கூறினார். "குடும்பங்களைப் பொறுத்தவரை, எதிர்பாராத நிகழ்வுகள் நடந்தாலும் அவர்கள் கவனித்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை அறிவது. இது வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்வதில் ஸ்திரத்தன்மை, மன அமைதி மற்றும் பின்னடைவை உருவாக்குவது பற்றியது. யாழ்ப்பாணத்தில் குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் வாழ்க்கைப் பாதுகாப்பை செயல்படுத்த முயல்வதை நாங்கள் கண்டிருக்கின்றோம், ஏனென்றால் அது நிதிக்கு அப்பாற்பட்ட பாதுகாப்பு உணர்வை வழங்குகின்றது என்பதை அவர்கள் அறிவார்கள்."

ஆயுள் காப்பீட்டுக் கொள்கைகள், சார்ந்திருப்பவர்களுக்கு நிதிப் பாதுகாப்பு, கல்விச் செலவுகளை ஈடுசெய்தல் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படும் நிதிச் சுமைகளுக்கு எதிராகப் பாதுகாத்தல் உள்ளிட்ட பல நன்மைகளை வழங்குகின்றன. AIA இன் சலுகைகள், காப்புறுதியாளர்கள் குடும்பங்களை கஷ்டங்களிலிருந்து பாதுகாத்து, எதிர்காலத்திற்கான பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத்தன்மை ஆகிய இரண்டையும் வழங்குகின்றது. யாழ்ப்பாணக் கிளையின் ஊடாக, AIA எண்ணற்ற குடும்பங்களுக்கு ஆயுள் காப்புறுதித் திட்டங்களை வழங்கியுள்ளது. அது அவர்களின் இலக்குகளுக்கு ஆதரவாக வாழ்வின் சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

AIA யாழ்ப்பாணக் கிளை தனது 15வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இத்தருணத்தில், மேலும் பல வருட வளர்ச்சி, புதுமை மற்றும் சேவையை எதிர்பார்க்கின்றது. வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், பிராந்தியத்தில் இன்னும் அதிகமான குடும்பங்களுக்கு சேவை செய்ய அதன் வரம்பை விரிவுபடுத்துவதிலும் கவனம் செலுத்துவதன் மூலம், மக்கள் ஆரோக்கியமான, நீண்ட மற்றும் சிறந்த வாழ்க்கையை வாழ உதவுவதற்கான AIA இன் வாக்குறுதியை வழங்குவதில் கிளை தன்னை அர்ப்பணித்துள்ளது.

AIA யாழ்ப்பாணக் குழுவானது தனது வெலத் பிளானர்களில் தொடர்ந்து முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது, அவர்களுக்கு பயிற்சி மற்றும் வளங்களை அளித்து அவர்கள் வெற்றிபெற உதவுவதோடு வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த சேவையை வழங்கவும் திட்டமிட்டுள்ளது. தாம் பெற்ற நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை கட்டியெழுப்புவதன் மூலம், கிளையானது சமூகத்தில் அதன் தாக்கத்தை ஆழப்படுத்துவதையும், யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் இன்றியமையாத பங்கை தொடர்ந்து ஆற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

AIA இன் யாழ்ப்பாணக் கிளையின் 15 ஆண்டு நிறைவு என்பது பல வருட கொண்டாட்டம் மட்டுமல்ல, அர்ப்பணிப்பு, நம்பிக்கை மற்றும் நிதிப் பாதுகாப்பின் மூலம் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையின் சக்திக்கு இது ஒரு சான்றாகும். AIA தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், வெலத் பிளானர்களை மேம்படுத்துவதற்கும், வாழ்க்கைப் பாதுகாப்பின் வாக்குறுதி அனைவருக்கும் எட்டக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் யாழ்ப்பாண கிளை தயாராக உள்ளது.

(CR/43922) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கச்சதீவை வழங்கியிருக்கக் கூடாது

## தமிழிசை தெரிவிப்பு

சென்னை, டிசெ. 21 கச்சதீவை இலங்கைக்கு வழங்கியிருக்கக்கூடாது. கச்சதீவை இலங்கைக்கு வழங்கி மீனவர்களின் பாவங்களை தி.மு.க. தேடிக்கொண்டுள்ளது என்று பா.ஜ.க.வின் முக்கியஸ்தரான தமிழிசை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- தி.மு.க. தனது ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள, காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கச்சதீவைத் தாரைவார்த்தது. அதனால்தான் இன்று தமிழக மீனவர்கள் அவஸ்தைப் படுகின்றனர். அன்று கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்படவில்லை என்றால், இன்று அந்தப் பகுதி சுதந்திர மீன்பிடி வலயமாக இருந்திருக்கும் - என்றார். (அ-ம-இ)



## சிறுத்தைகள் விழிப்புணர்வு

வனஜீவராசிகள் மற்றும் இயற்கைப்பாதுகாப்புச் சங்கத்துடன் இணைந்து எல்.ஓ.எல்.சி. நிறுவனத் தின் ஏற்பாட்டில், 'வேட்டையாடும் விலங்குகளைப் பாதுகாப்போம் விலங்குகளில் இருந்து நாங்கள் பாதுகாப்பாக இருப்போம்' என்ற தொனிப்பொருளில் சிறுத்தைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு விசுவமடு தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் எல்.ஓ.எல்.சி. நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் இ.சுதாகரன், கிளிநொச்சி கிளை முகாமையாளர் க.லோகேஸ்வரன், புதுக்குடியிருப்பு கிளை முகாமையாளர் ர.திலகராஜ், தேராவில் தமிழ்வித்தியாலய அதிபர் எஸ்.பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச- 25, 19)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நெடுங்கேணி கரடிப்பிலவுக் கிராமத்தில், தெரிவு செய்யப்பட்ட 56 குடும்பங்க ளுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த உலர் உணவுப் பொருள்களை வழங்கி வைத்தார். (ச-25, 66)



வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட 3 குடும்பங்களுக்கான மலசலகூடங்கள், உரும்பிராய் ஞானவைரவர் சமூக அறக்கட்டளையினரால், கோப்பாய் பிரதேச செயலாளரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. நிகழ்வில் உரும்பிராய் கிராம அலுவலர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ச-25, 125)

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.21

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கட்டட நிர்மாணத்துறை, கணினி பட வடிவமைப்பாளர், குளிர்சாதன மற்றும் வளிசீராக்கி தொழினுட்பவியலாளர், அலுமினியம் பொருத்துனர், படவரைஞர், மின்னியலாளர், கணினி வன்பொருள் திருத்துனர், முன்பள்ளி ஆசிரியர், தாதியலாளர், முதியோர் பராமரிப்பாளர், பொது பராமரிப்பாளர் ஆகிய கற்கைநெறிகளுக்கான போதனாசிரியர்கள் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் கா.பொ.த தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். 3 ஆம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் என்.வி.கியூ 4 , 5 அல்லது அதற்கு மேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் ஒரு வருடம் கற்பித்தல் அனுபவம் இருக்க வேண்டும். சம்பந்தப்பட்டத் துறையில் ஒரு வருடத்துக்கு மேலான தொழிற்றுறை அனுபவம் இருக்க வேண்டும். மேற்படி தகைமையுடையவர்கள் தமது சுயவிவரக்கோவையுடன் கல்வி, தொழிற்கல்வி அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை 4 ஆம் மாடி , வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விவரங்களுக்கு 0212227 949, 0710318737 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். (ச-25)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01 • 08 • 1930

விண்ணில்
21 • 12 • 2021



**அமரர் சின்னத்தம்பி தியாகராஜா STR**

ஸ்தாபகர்: எஸ்.ரீ. ஆர் பிலிம்ஸ்
ராஜா டாக்கீஸ் & ராஜா 2 சினிமா - யாழ்ப்பாணம்
சரஸ்வதி டாக்கீஸ் - திருகோணமலை
சாந்தி சினிமா & சுகந்தி சினிமா - மட்டக்களப்பு
வசந்தி சினிமா & அமுதா சினிமா - வவுனியா
STR யாத்திரிகர் மடம் - திருக்கேதீஸ்வரம்

**"STR" என்கின்ற மூன்றெழுத்து காக்கும் எங்கள் முதலெழுத்து**

மூன்றாண்டுகள் நகர்ந்தாலும்
எம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வரும்போது நிலைகுலைந்து போகிறோம் அப்பா
உங்களை நினைக்காத நொடிகள் இல்லை
அன்பினால் பண்பினால் நட்பினால் ஆளுமையால் எங்கள்
அனைவரின் உள்ளங்களிலும் குடியிருக்கும் எம் தந்தையே
என்றென்றும் நீங்கள் காட்டிய பாதையில் நாமும் தொடர்ந்து சென்று உங்கள் பெயரை
மேலும் மெருகூட்டி உங்களை என்றென்றும் நினைத்திருப்போம்.

**அன்புத் தந்தையின் ஆத்மா**
**இறைபதமடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக**
**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் : சிவஞானம் கபிலன்**




தோற்றம் 04.09.1983
மறைவு 20.12.2024

எமது ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான சிவஞானம் கபிலன் அவர்கள் காலமானார் எனும் செய்தி அறிந்து ஆறாத் துயரடைவதோடு அலுவலகத்தின் சகல செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்ட தன்னலமற்ற பணியாளனின் இழப்பு எமக்கு மட்டுமல்ல அவர் சார்ந்த குடும்பத்தினர்கள் மற்றும் சமூகத்தினர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவ்வகையில் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரி சங்கம்-பிரதேச செயலகம்**
**ஊர்காவற்றுறை.**

(CS 29483) V-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொலிஸ்மா அதிபர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 21
பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இன்று யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பொலிஸ் திணைக்களங்களின் நத்தார் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காகவே அவர் இவ்வாறு வருகைதரவுள்ளார். (அ-ம-26)

## சித்திரைப்...

கண்டிக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்றார். அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே தேர்தல் தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

அதன்பின்னர் புதிதாக வேட்புமனுக்கள் கோரப்படும். தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல்கள் உள்ளன. அவை நிவர்த்தி செய்யப்பட்டு அடுத்த வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும்" - என்றார்.

இதேவேளை - அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும். அதற்குரிய சட்டதிருத்த யோசனை ஜனவரி மாதத்தின் ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். புதிதாக வேட்புமனு கோரப்படும். தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயிக்கும் நாளில் தேர்தல் நடத்தப்படும்.

அதன்பிறகு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும். எல்லை நிர்ணயக் குழு முன்வைத்த அறிக்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. எனவே, அதற்கும் சட்டத்திருத்தங்கள் அவசியம். அதற்குரிய நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும். அதன்பிறகு அரசமைப்பின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## இன்னும்...

துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை உள்ளது. அதற்கமையவே செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். எனினும், காலமாற்றத்துக்கேற்ப அதனைப் புதுப்பிக்க வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். எட்கா உடன்படிக்கை தொடர்பில் கருத்தாடல் உள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் எட்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டது எனவும், நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும் வங்குரோத்தடைந்த சில அரசியல்வாதிகள் போலிப் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

எட்கா ஒப்பந்தம் தொடர்பில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. அது தொடர்பான பேச்சுகளை முன்னெடுப்பதற்கே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக எட்காவை அமுல்படுத்தும் முடிவை எடுக்கவில்லை. எமது நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு ஒப்பந்தத்தையும் ஆதரிப்பதில்லை என்பது எமது கொள்கை. இரு நாடுகளினதும் பொருளாதார நலனுக்காக செயற்பட நாம் தயார்" - என்றார். (அ-ம-44)

## உட்கட்டமைப்பை...

சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இரணைமடு பொதுச்சந்தை வியாபாரிகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக சிறந்த புனரமைப்பு இல்லாமல் சந்தை காணப்படுகின்றது. அத்துடன், சந்தையின் பாதுகாப்புப் பலவீனமாகக் காணப்படுவதால், தொடர்ச்சியாகத் திருட்டுகள் இடம்பெறுகின்றன. எனவே இவ்வாறான நிலை மைகளை மாற்றியமைத்து சீரானமுறையில் நாம் வர்த்தகத்தை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேசசபையின் செயலாளர் செ. செல்வகுமாரை தொடர்புகொண்டு கேட்டபோது, சந்தையின் வசதி வாய்ப்புகளைப் படிப்படியாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-25-113)

## சிறுபான்மையினர்...

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர், முப்படைத் தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட 18 பேர் இந்த ஜனாதிபதி செயலணிக்காகப் பெயரிடப்பட்டுள்ளனர். எனினும், சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்துக்கு இடம் இல்லாமல் இந்தச் செயலணி அமைக்கப்பட்டுள்ளமை பல விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள செயலணியில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டுள்ளமை பெரும் பின்னடைவாகவே அமைந்துள்ளது. (அ-ச-இ)

## கிளிநொச்சியில்...

ஆபிரிக்க நாடான கானாவில் இருந்து வந்த நபருக்கே இவ்வாறு மலேரியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட மலேரியாத் தடுப்பு மருத்துவர் அ. நிமால் தெரிவித்துள்ளார். (அ-ம-113)

## உள்ளூராட்சித்...

பெரமுனவைப் பலப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் எமக்குப் பெரும் சவாலாக இருந்தது. ஆனால் பொதுத்தேர்தலில் மீண்டெழ முடிந்தது. அதைவிடவும் சிறந்த பெறுபேறு உள்ளூராட்சித் தேர்தலில் கிடைக்கும் - என்றார். (அ-ம-44)

## முன்னாள்...

உதவியாளர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையிலேயே நேற்றையதினம் திலீபன் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், இருவரையும் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (அ-ம-18)

## இஸ்ரேல்...

யுறுத்தப்பட்டுள்ளது. பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டமைக்கும், உயிரிழந்தோரின் சடலங்கள் அவமரியாதை செய்யப்பட்டமைக்கும் பொறுப்புக்கூறவேண்டிய இஸ்ரேலிய இராணுவ அதிகாரியான கல்ப் பெரென்புக் என்பவரே இலங்கையில் உள்ளார். அவரைக் கைதுசெய்வதற்கு எந்தத் தாமதமும் இல்லாமல் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று 'த ஹின்ட் ரஜாப் பவுன்டேஷன்' தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரியான கல்ப் பெரென்புக் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க் குற்றவாளி என்று அடையாளப்படுத்தப்பட்ட ஒருவராவார். எனவே, அவரைக் கைது செய்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைப்பது இலங்கை அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும் என்றும் 'த ஹின்ட் ரஜாப் பவுன்டேஷன்' சுட்டிக்காட்டியுள்ளது.

த ஹின்ட் ரஜாப் பவுன்டேஷனின் வலியுறுத்தலைத் தொடர்ந்து, இராணுவ அதிகாரி கல்ப் பெரென்புக் இஸ்ரேலால் உடனடியாக நாடு திரும்புமாறு பணிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் நேற்று மாலை இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார்.

'த ஹின்ட் ரஜாப் பவுன்டேஷன்' என்பது போர்க்குற்றத்தில் ஈடுபடும் இஸ்ரேலிய அதிகாரிகளின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## படகில்...

ரொஹிங்ய அகதிகளின் படகு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக் கடற்பகுதியில் கரையொதுங்கியது. அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு திருகோணமலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்கள் திருகோணமலை கடற்படையிடம் நேற்றுப் பாரப்படுத்தப்பட்ட நிலையில், அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்போதே, தம்மில் ஐந்து பேர் சுகவீனம் ஏற்பட்டு உயிரிழந்துவிட்டனர் என்றும் அவர்களின் ஜனாஸாவைக் கடலில் வீசிவிட்டு வந்ததாகவும் விசாரணையாளர்களிடம் ரொஹிங்ய அகதிகள் கூறியுள்ளனர்.

அத்துடன், இலங்கைக்கு வரவேண்டும் என்ற நோக்கத்தில் தாம் பயணப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அகதிகளை பாடசாலையொன்றில் தங்கவைக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## மண்கும்பானில்...

கார், மோட்டார்சைக்கிள் என்பன விபத்துள்ளானதிலேயே நிலோஜன் (வயது- 21) என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார். மோட்டார்சைக்கிளைச் செலுத்திச்சென்றவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

பின்னால் அமர்ந்து சென்றவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27-26)

## பாம்பு...

(வயது-43) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை பாம்பால் தீண்டப்பட்ட அவர் பெரிய பண்டிவிரிச்சான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னாயத்த ஒத்திகை

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றின் ஆதரவோடு வேள்ட் விசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில், வெள்ள முன்னாயத்த ஒத்திகை ஸ்கந்தபுரம் கிராமத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. குளம் உடைப்பெடுத்தால் எவ்வாறு முன்னாயத்தமாக செயற்படவேண்டும் என மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. முன்னாயத்த ஒத்திகையில் இராணுவத்தினர், பொலிஸார், பிரதேசசபையினர், சுகாதாரத் துறையினர் கலந்து கொண்டனர். (ச-25, 113)

## வீட்டுப்பணிப் பெண் தேவை

யாழ் நகரப்பகுதியிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய வீட்டுப்பணிப் பெண் தேவை

**மாதம் சம்பளம் 60000 /=**
**(வயது 50 உட்பட்டவர்)**

தொடர்புகளுக்கு:
**076 890 4501**

## வீடு வாடகைக்குத் தேவை

வவுனியாவில் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. குருமன்காடு, வைரவப்புளியங்குளம் பகுதிகளில் விரும்பத்தக்கது.

(CS56977) J-1

தொடர்பு:- **074 101 1873**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) தென்மராட்சியில் பிரபல வர்த்தகர் 1989ம் ஆண்டு உத்தர நட்சத்திரம் சிம்மராசி 4ம் இடத்தில் சூரியன் செவ்வாய் பிறந்த மணமகனிற்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படவில்லை)

(CS/56971) JK

தொடர்பு:- **071 436 3253**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகர், சென்.ஜோன்ஸ் கல்லூரியை அண்மித்த பகுதிகளில் 5 கி.மீ க்குள் 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளுடன் ஒவ்வொரு அறைக்கும் தனித்தனியான இணைந்த குளியலறையுடன் விசாலமான வளவில் அமைந்துள்ள வீடு வாடகைக்குத் தேவை. தளபாடங்கள் விரும்பத்தக்கது.

(cs.56973) N -1)

தொடர்பு: **077 364 9897**

## கட்டடம் வாடகைக்கு தேவை

யாழ்நகரை அண்டிய பகுதிகளில் 1500-2000 சதுர அடி கொண்டதும் ஆடைத்தொழிற்சாலை (காமன்ஸ்) நடத்துவதற்கு பொருத்தமான சூழல் மற்றும் போக்குவரத்து வசதிகளை கொண்டமைந்ததுமான கட்டடம் வாடகைக்குத் தேவை.

(cs.56973) N-1)

தொடர்பு: **077 364 9897**

## வேலையாட்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.**

1. முகாமையாளர்
2. காசாளர்
3. அலுவலக உதவியாளர்
04. பேருந்து நடத்துநர்

(CS56972) N-1

**077 386 6250, 077 573 1318**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த (V) 1998ம் ஆண்டு சதய நட்சத்திரம் 1ம் பாதம் 11ல் செவ்வாய். 52 1/2 பாவம் Software Engineer பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. (புதிவுகள் இலவசம்). எம்மிடம் சகல தரப்பிலும் ஜாதகங்கள் உண்டு.

(CS56978) J-1

ஐயனார் வீதி, சண்டிலிப்பாய். **077 656 8282**

## ஜேர்மன் செப்பேர்ட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

35 நாட்கள் பூர்த்தியடைந்த தூய ஜேர்மன் செப்பேர்ட் இன முழுக்கறுப்புநிற ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

- விலை - 30,000/-
- இடம் - கோப்பாய்

(CS56976) J-1

தொடர்புகளுக்கு:-
**076 200 1700**

## முட்டை மலிவு விற்பனை

பிறக்க இருக்கும் 2025ம் ஆண்டு புதுவருடத்தை முன்னிட்டு முப்பத்திநான்கு வருட பூர்த்தி யாழ் நகரில் யாழ் முட்டை விற்பனை நிலையம் என இயங்கி வந்த கடை புதிய பெயர் VS.முட்டை விற்பனை நிலையம் என மாற்றப் பெற்று முட்டை விலை 25/= இருபத்தி ஐந்து ரூபாய். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**VS பாம் முட்டை விற்பனை நிலையம்**
இல 02 நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
**077 623 4204, 021 222 4365**

## விவசாயிகளுக்கு



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய. இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர். பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

**"நாங்கள் உங்களோடு"**

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

# மரண அறிவித்தல்

## சிவஞானம் கபிலன்



தோற்றம் 04.09.1983 — மறைவு 20.12.2024

காரைநகர் விளானை களபூமியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னால் காரைநகர் சமுர்த்தி உத்தியோகத்தரும் தற்போதைய ஊர்காவற்துறை சமுர்த்தி முகாமையாளருமான சிவஞானம் கபிலன் அவர்கள் நேற்று (20.12.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னால் காரைநகர் பிரதேசசபை பிரதம உதவி முகாமையாளரானசிவஞானம் மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் மகாலிங்கம்-ஜேயமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெசோனா (யசோ) அவர்களின் பாசமிகு கணவரும் ரக்ஷிகா, யஸ்விகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிஷாந்தி (லண்டன்) அவர்களின் உடன்பிறப்பும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தங்கம்மா, இராமலிங்கம்-பூரணம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புப் பேரனும் பிரஷாந்தினி, ஹிசோத் ஆகியோரின் சகோதரனும் மனோகரன், தனுஷா, தர்சிகா, கோபி, துஸ்யந்தன் (அவுஸ்ரேலியா) துஸிகா (அவுஸ்ரேலியா) ஜெனிஷ்ரன் (பெல்ஜியம்), ஜெனிற்றா, ஜெயமதி, ஜெசித்தா, சுரேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனனும் கனகலிங்கம் அவர்களின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன், குகதாசன் மற்றும் அம்பிகைபாகன், பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு மருமகனும் விபிஷா, ராகுல் ஆகியோரின் தாய்மாமனும் பிரணவி, கபிஷாந், ஜயஸ்மிகா, கரிஷ்ணவி ஆகியோரின் சித்தப்பாவும், பத்மபிரகாஷ், தவநீதன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR 43938) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.